# September 30, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாட்டின் ஒட்டுமொத்த தொலைத் தொடர்பு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 136.07 கோடியாக அதிகரித்து, புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

(i) தொலைபேசி பிரிவில் புதிய வாடிக்கையாளர்களைச் சேர்ப்பதில் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம், தனது போட்டியாளரான ஏர்டெல்லைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

(ii) இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (டிராய்) வெளியிட்ட மாதாந்திர அறிக்கையின்படி, வயர்லைன் இணைப்புகள் உள்பட நாட்டின் ஒட்டு மொத்த தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஆகஸ்ட் மாத இறுதியில் 136.07 கோடியாக அதிகரித்துள்ளது. இதன்மூலம், நாட்டின் மாதாந்திர தொலைத்தொடர்பு வளர்ச்சி விகிதம் 0.47 சதவீதமாக பதிவாகியுள்ளது.

(iii) நாட்டின் ஒட்டுமொத்த வயர்லெஸ் (மொபைல் மற்றும் ஃபிக்ஸட் வயர்லெஸ்) வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஆகஸ்ட் மாத இறுதியில் 131.22 கோடியாக அதிகரித்துள்ளது. இதன் மாதாந்திர வளர்ச்சி விகிதம் 0.46 சதவீதமாகும்.

(iv) ஒட்டுமொத்த தொலைபேசி சந்தையில் தனியார் நிறுவனங்கள் 92.75 சதவீத வாடிக்கையாளர்களுடன் ஆதிக்கம் செலுத்துகின்றன. மீதமுள்ள 7.25 சதவீதத்தை பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் தன்வசம் வைத்துள்ளன. அதிக 'ஆக்டிவ்' வாடிக்கையாளர்களை (99.01 சதவீதம்) கொண்ட நிறுவனமாக ஏர்டெல் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

2. சீனாவின் புகழ்பெற்ற பெருஞ்சுவரை யொட்டி ஒரு சில இடங்களில் கடந்த 20 ஆண்டுகளாக சுரங்கக் கழிவுகள் கொட்டப்படுவதால் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

(i) படையெடுப்புகளைத் தடுப்பதற்காக பண்டைய சீன ஆட்சியாளர்கள் கட்டிய சீனப் பெருஞ்சுவர் வடக்கு சீனா முழுவதும் 21,000 கிலோமீட்டருக்கும் (13,000 மைல்கள்) அதிகமான தொலைவுக்குப் பரந்து விரிந்துள்ளது. சீனாவின் மிகவும் புகழ்பெற்ற உலகப் பாரம்பரியச் சின்னமாகவும், சீன நாகரிகத்தின் அடையாளமாகவும் திகழும் பெருஞ்சுவர், உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது.

(ii) இந்நிலையில், ஷான்சி மாகாணத்தின் நிங்வு கவுண்டியில் உள்ள பெருஞ்சுவரின் ஒரு பகுதி, சுமார் 20 ஆண்டுகளாக சுரங்கக் கழிவுகளைக் கொட்டுவதற்கான இடமாக பயன்படுத்தப்படுகிறது. இதுகுறித்து அதிகாரிகளிடம் சமூக ஆர்வலர்கள் பலமுறை தகவல் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று ஹாங்காங்கை தலைமையிடமாகக் கொண்ட சௌத் சீனா மார்னிங் போஸ்ட்

செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(iii) பெருஞ்சுவரின் குவோஜியாயோ பகுதியில் 2007-ஆம் ஆண்டுமுதல் சேதம் ஏற்படத்தொடங்கியது. அப்போது, உரிமம் பெறாமல் செயல்பட்ட நிங்வு சாவோகாய் நிலக்கரி நிறுவனம், சுரங்கப் பணிகளின்போது உருவான கழிவுகளை அகற்றுவதற்காகப் பெருஞ்சுவரின் குறுக்கே ஒரு பள்ளத்தை தோண்டியது. மேலும், கழிவுகளும் அப்பகுதியில் கொட்டப்பட்டன. இதன் விளைவாக, இப்போது பெருஞ்சுவரில் 6 மீட்டர் (19 அடி) அகலத்துக்குப் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

3. நடப்பு ஆசிய விளையாட்டு போட்டிகளில் தடகள பிரிவில் இந்தியாவுக்கான முதல் தங்கப் பதக்கத்தை, மகளிர் 4*400 ரிலே ஓட்டத்தில் கிரண் பஹல், பூவம்மா மசெத்திரா, பிராச்சி, வித்யா ராம்ராஜ் ஆகியோர் அடங்கிய இந்திய அணி வென்றது. துப்பாக்கி சுடுதலில் மகளிர் டிராப் தனிநபர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையாக நீரு தண்டா வரலாறு படைத்தார். அதே பிரிவில் மகளிர் அணி வெள்ளி வெல்லவும் அவர் துணை நின்றார்.

(i) தடகளத்தில் குல்வீர் சிங் தனது 'ஹாட்ரிக்' பதக்கத்தைக் கைப்பற்ற, உயரம் தாண்டுதலில் பூஜா சிங் வெண்கலம் வென்றார்.

(ii) கலப்பு ரிலே, ஆடவர் ரிலேவிலும் இந்தியாவுக்கு வெண்கலம் கிடைத்தது. இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 50-ஐ கடந்தது.

4. கடந்த ஓராண்டில் 9 சதவீத உயர்கல்வி மாணவர்களுக்குத் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் ஏற்பட்டது உச்சநீதிமன்றம் நியமித்த தேசிய பணிக்குழு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

(i) நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களின் மனநலன் மற்றும் நல்வாழ்வு தொடர்பான பிரச்னைகளை ஆய்வு செய்யவும், மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தடுக்கவும் கடந்த ஆண்டு மார்ச் மாதம் தேசிய பணிக் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது.

(iii) ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ்.ரவீந்திர பட் தலைமையிலான அந்தக் குழு, நாடு முழுவதும் ஆய்வு மேற்கொண்டது.

(iv) இந்த ஆய்வின்போது கடந்த 6 மாதங்களில் ஒருசில நேரங்களில் தாங்கள் மிகவும் மன அழுத்தம், மன வேதனை, மனச் சோர்வு, மிகுந்த கவலைக்கு உள்ளானதாக சுமார் 15 சதவீத மாணவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஓராண்டில் தங்களுக்கு அடிக்கடி தற்கொலை செய்துகொள்ளும் எண்ணங்கள் ஏற்பட்டதாக 9 சதவீத மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

(v) தங்கள் கல்வி நிறுவன நிர்வாகம் முக்கியப் பிரச்னைகளை நியாயமாக கையாளும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாக 56 சதவீத மாணவர்கள் கூறியுள்ளனர். அதே நேரம், தங்கள் கல்வி நிறுவனத்தில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் சேவைகள் இல்லை என்று சுமார் 32 சதவீத மாணவர்கள்

குறிப்பிட்டுள்ளனர்.

(vi) கல்வி நிறுவனத்தில் தங்களால் மற்றவர்களுடன் ஒன்றமுடியாமல் தனியாக இருப்பதுபோலவும், வெளிநபர்களைப் போலவும் உணர்ந்துள்ளதாக 34 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.

(vii) மாணவர்கள் தெரிவித்த கல்வி தொடர்பான பிரச்னைகளில் கடுமையான வருகைப் பதிவு விதிமுறைகள், மருத்துவம் மற்றும் அதுசார்ந்த படிப்புகளில் அதிகப்படியான படிப்பு மற்றும் பயிற்சி சுமை, மருத்துவ மாணவர்களின் பணி நேரம் விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டி மட்டுமல்லாமல், ஒருவர் இயல்பாக தாங்கக் கூடிய அளவைவிட நீண்டிருப்பது உள்ளிட்டவையும் அடங்கும்.

(viii) இதேபோல மாணவர்களை ஒருவருடன் ஒருவர் ஒப்பிட்டு மதிப்பெண் வழங்கும் முறை, வேலைவாய்ப்புக்குக் கடுமையான தகுதி மதிப்பீடுகள் இருப்பதால் பொறியியல் கல்லூரிகளில் மிகத் தீவிரமான போட்டி உள்ளதாக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(ix) இந்த ஆய்வு மொத்தம் 2.43 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 67 சதவீதம் பேர் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். இந்த ஆய்வு குறித்த விவரங்கள் பணிக் குழுவின் இறுதி அறிக்கையில் சேர்க்கப்பட்டு, வரும் அக்.31-க்குள் உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(x) மாணவர்கள் தற்கொலை குறித்து மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், 'தேசிய குற்ற ஆவணக்காப்பக தரவுகளின்படி, உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் தற்கொலை விகிதம் 26.37 சதவீதத்தில் இருந்து 30.02 சதவீதமாக அதிகரித்துள்ளது' என்று தெரிவித்தார்.

5. உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு குஜராத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுனிதா அகர்வால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் உச்ச நீதிமன்றத்தில் பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 3-ஆக அதிகரிக்கும்.

(i) ஏற்கெனவே பெண் நீதிபதி பி.வி.நாகரத்னா, கடந்த 2021 முதல் உச்சநீதிமன்றத்தில் பணியாற்றி வருகிறார். நீதிபதி வி.மோகனா, கடந்த ஜூன் மாதம் பதவியேற்றார். இவர், உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞராக இருந்து அந்த நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் ஆவார்.

(ii) பணிமூப்பு அடிப்படையில் அடுத்த ஆண்டு செப்டம்பரில் தலைமை நீதிபதியாக பி.வி.நாகரத்னா பதவியேற்பார். இதன்மூலம் நாட்டின் முதல் பெண் தலைமை நீதிபதி என்ற பெருமை அவருக்கு கிடைக்கும்.

6. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா – பாகிஸ்தான்

(i) ஐ.நா. பொதுச் சபையில் பாகிஸ்தான் பிரதமரின் குற்றச்சாட்டுகள்

- செப்டம்பர் 25 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 81-ஆவது அமர்வில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீஃப், ஜம்மு-காஷ்மீர் பிரச்னையை எழுப்பினார்.
- ஒரு வருடத்துக்கு முன்பு, "இந்தியாவின் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு" எதிராக ஐ.நா. சாசனத்தின் 51-ஆவது பிரிவின் கீழ் தற்காப்பு உரிமையை பாகிஸ்தான் பயன்படுத்தியதாக ஷெரீஃப் கூறினார்.
- அணு ஆயுதங்களைக் கொண்ட இரு நாடுகளுக்கும் இடையே முழுமையான போர் ஏற்படுவதைத் தடுக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மேற்கொண்ட தலையீடு முக்கியப் பங்கு வகித்ததாக அவர் தெரிவித்தார்.
- காஷ்மீர் மக்கள் எட்டு தசாப்தங்களாக ஐ.நா. மேற்பார்வையிலான வாக்கெடுப்புக்காக காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

(ii) பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் 'ஆபரேஷன் சிந்தூர்'

- 2025 ஏப்ரல் 22 அன்று ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதில் 25 சுற்றுலாப் பயணிகளும், ஒரு உள்ளூர் குதிரைச் சவாரி தொழிலாளரும் அடங்குவர்.
- தேசிய புலனாய்வு முகமை (NIA) மேற்கொண்ட விசாரணையில், பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட லஷ்கர்-இ-தொய்பாவின் கிளை அமைப்பான 'தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட்' (TRF) இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் இருந்ததாக அடையாளம் காணப்பட்டது.
- இதற்குப் பதிலடியாக, 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற குறியீட்டுப் பெயரில் பாகிஸ்தானுக்குள் இருந்த பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியது. ஷெரீஃப் ஐ.நா.வில் இதனை "வெளிநாட்டு ஆக்கிரமிப்பு" என்று குறிப்பிட்டார்.

(iii) சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பான சர்ச்சை

- பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, 1960-ஆம் ஆண்டு சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ஒருதலைப்பட்சமாக நிறுத்திவைத்தது.
- ஒப்பந்தத்தின் விதிகளின்படி இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு சட்ட அடிப்படை இல்லை என்று ஷெஹ்பாஸ் ஷெரீஃப் குற்றம்சாட்டினார்.
- அசல் 1960-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான வெளிப்படையான விதிகள் இல்லாவிட்டாலும், தேசியப் பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தத்தை நிறுத்திவைக்கும் அதிகாரம் தனக்கு இருப்பதாக இந்தியா தெரிவித்தது.

(iv) ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவின் பதில்

- ஐ.நா.வுக்கான இந்தியாவின் பிரதிநிதி பெட்டல் கஹ்லோட் (Petal Gahlot) கடுமையான பதிலுரையை வழங்கினார். பொய்யான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து கூறுவதால் அவை உண்மையாகிவிடாது என்று அவர் குறிப்பிட்டார்.
- ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும்

பிரிக்க முடியாத பகுதியாகும் என்று கஹ்லோட் உறுதிபடுத்தினார்.

- காஷ்மீர் தொடர்பான எந்தவொரு விவாதமும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (PoK) மீது கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தியா தெரிவித்தது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் கீழ் அங்கு வசிக்கும் மக்கள் எதிர்கொண்டு வருவதாகக் கூறப்படும் படுகொலைகள், கடுமையான வன்முறைகள் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் மறுப்பு ஆகியவற்றை இந்தியா சுட்டிக்காட்டியது.
- நீண்டகாலமாக எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு பாகிஸ்தான் ஆதரவளித்து வருவதாக இந்தியா குற்றம்சாட்டியது. மேலும், தற்காப்புக்கான தனது உரிமையை வலியுறுத்திய இந்தியா, பயங்கரவாதம் தொடர்ந்தால் பாகிஸ்தான் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று எச்சரித்தது.

(v) சிம்லா ஒப்பந்தம் மற்றும் இருதரப்பு அணுகுமுறை

- 1971-ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போருக்குப் பின்னர், 1972 ஜூலை மாதம், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் பாகிஸ்தான் அதிபர் சுல்பிகார் அலி பூட்டோ ஆகியோரால் சிம்லா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட இந்தியா–பாகிஸ்தான் இடையிலான தீர்க்கப்படாத அனைத்து பிரச்னைகளும் மூன்றாம் தரப்பின் தலையீடு இல்லாமல், இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலமாக மட்டுமே தீர்க்கப்பட வேண்டும் என்று சிம்லா ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.
- ஐ.நா., ஐ.நா. மனித உரிமைகள் பேரவை (UNHRC) மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC) போன்ற சர்வதேச அமைப்புகளின் மூலம் காஷ்மீர் பிரச்னையை சர்வதேசமயமாக்க பாகிஸ்தான் மேற்கொள்ளும் முயற்சிகள் சிம்லா ஒப்பந்தத்திற்கு நேர்மாறானவை.

அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் வெளிப்படையாக ஆதரவளிப்பதை சர்வதேச அரங்குகளில் இந்தியா வெளிக்கொணரும் வகையில் தனது தூதரக முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும்